## 2026 சட்டமன்றத் தேர்தலில், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 3.4.2026 அன்று தேர்தல் பரப்புரை செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு:





● சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 116-வது கழக வட்டப் பகுதியில், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.





● சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதிக்கு உட்பட்ட 62, 62 (அ) மற்றும் 63 ஆகிய கழக வட்டங்களில் வாக்கு சேகரித்தார்.







● சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதிக்கு உட்பட்ட சிறுபான்மை அமைப்புகளின் பிரதிநிதிகள், சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## பிரச்சாரத்தின் போது சாலையோரக் கடையில் இளநீர் அருந்திய கனிமொழி கருணாநிதி எம்.பி.!



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பிரச்சாரத்திற்கு செல்லும்போது, தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்தபோது அங்குள்ள சாலையோரக் கடையில் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றத் தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, தனியார் தொலைக்காட்சி பத்திரிகையாளரும் இளநீர் அருந்தினர்.

### களப்பணியாற்றி வரும்

# கழக செயல்வீரர்களை ஊக்கப்படுத்தினேன்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

*சென்னை, ஏப். 4–*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:*

***வெற்றி ஒன்றே இலக்கு! ஓய்வின்றி உழைக்கும் கழகத்தின் செயல்வீரர்களுக்குப் பாராட்டுகள்!***

***நேற்றிரவு கோவையில் முதற்கட்டப் பரப்புரைப் பயணத்தை நிறைவுசெய்துவிட்டு, சென்னைக்குத் திரும்பினேன்.***

***இன்று காலை, தமிழ்நாடு முழுவதும் களப்பணியாற்றி மக்களின் நம்பிக்கையை வாக்குகளாக உறுதிசெய்து வரும், கழகச் செயல்வீரர்களுடன் உரையாடி, ஊக்கப்படுத்தினேன்.***

***மாலை, பாளையங்கோட்டையில் இரண்டாம்கட்டப் பரப்புரைப் பயணத்தைத் தொடரப் புறப்படுகிறேன்.***



***#VoteForDMK #வெல்வோம்_ஒன்றாக!***

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.*

### வேட்பாளர் மு.அப்துல் வகாபை ஆதரித்து தேர்தல் பரப்புரை!

# மாநில உரிமைகளைப் பறிக்கும் பா.ஜ.க. திட்டத்தை முறியடிக்க கழகக் கூட்டணியின் வெற்றி அவசியம்!

## நெல்லை – பாளையங்கோட்டையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

பாளையங்கோட்டை, ஏப். 4–

நெல்லை மத்திய மாவட்டம் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி சார்பில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம் பாளை பி.பி.எல்.மண்டபத்தில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று இந்த தேர்தல் வெற்றி தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியாவைச் சுற்றியுள்ள மற்ற மாநிலங்களுக்கும் மாற்றத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை தரும்.மாநில உரிமைகளை பறிக்கும் பா.ஜ.க.வை எதிர்க்கவும் மத நல்லிணக்கத்தை காக்கவும் இந்த வெற்றி அவசியம். என்று பேசினார்.மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா வரவேற்புரையாற்றினார்.

பின்னர் கழக துணை பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் பேசியதாவது:–

முதல் கூட்டத்திலேயே வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன் என்று சொல்லக்கூடிய கூட்டணி நம்முடைய கூட்டணி.அதைப்போல நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் தேர்ந்தெடுத்து உங்கள் கைகளிலே ஒப்படைத்திருக்கக்கூடிய நம்முடைய வேட்பாளர் இந்தப் பாளையங்கோட்டை தொகுதியின் செல்லப்பிள்ளை மு.அப்துல் வஹாப். எந்த நேரத்திலே இந்தப் பகுதியில் உள்ள மக்கள் அவரை அழைத்தாலும் கூட்டணி இயக்கத்தில் சார்ந்து இருக்கக்கூடிய நண்பர்கள் அழைத்தாலும் ஓடோடி வரக்கூடிய ஒருவரைத் தான் வேட்பாளராக நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் வேட்பாளராக வெற்றி வேட்பாளராக தேர்ந்தெடுத்து உங்கள் முன்னால் நிறுத்தி இருக்கிறார்கள். மக்கள் மிகத் தெளிவாக இருக்கிறார்கள்.

யாருக்கு வாக்களித்தால் சாதனைகள் தொடரும்,யாருக்கு வாக்களித்தால் வேதனைகள் வந்து சேரும் என்று புரிந்து கொண்டவர்கள் தான் தமிழ்நாட்டு மக்கள்.

இங்கே இருக்கக் கூடிய ஊடக துறையைச் சார்ந்த நண்பர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. கூட்டம் வருகிறது சிலபேர் உரத்து பேசுகிறார்கள்.சில பேர் டெல்லியில் இருந்து வந்து பேசுகிறார்கள்,என்ற காரணத்திற்காக ஊடகங்கள் பல்வேறு ஆதங்கங்களை இன்று சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

### தமிழ்நாட்டு மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்!

ஆனால் தமிழ்நாட்டு மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். திராவிட மாடல் ஆட்சி அடுத்த முறையும் தமிழ்நாட்டிலே வந்தால் தான் ஐந்தாண்டுகளாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி தந்திருக்க கூடிய அந்த சாதனைகள்,அந்த முன்னேற்றங்கள் தொடரும் என்பதை மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

யார் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தால் தமிழ்நாடு ஒரு அமைதி பூங்காவாக

இருக்கும் என்பதை தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.மத அரசியலை,மதத்தை வைத்துக் கொண்டு மக்களைப் பிரித்து ஆளக்கூடிய சூழ்ச்சிகளை எல்லாம் முறியடிக்க கூடிய ஒரே கூட்டணி நம்முடைய கூட்டணி. இன்றைய முதலமைச்சர் அவர்கள் கூட்டணி வைத்துள்ளார்கள்.பல பேர் இங்கு ஏதோ நம்முடைய கூட்டணியிலே அந்தப் பேச்சுவார்த்தை நடக்கும் போது

எல்லாருக்கும் ஒரு குடும்பமாக இருந்தாலும் கூட தனக்கு என்று என்ன என்று உரத்து தான் கேட்பார்கள்.ஒரு



கூட்டணி யிலே பழைய இயக்கங்கள் இருக்கிறது.திராவிட முன்னேற்றக் கழகம் தனக்கான வேட்பாளர் அதிகமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் போராடுவோம். அதைப் போல காங்கிரஸ் கட்சி, தே.மு.தி.க.வி.சி.க.போன்ற ஒவ்வொருத்தரும் தனக்கு வேண்டும் என்பதை அந்தக் குடும்பத்தில் இருக்கக்கூடியவர்கள் எப்படி ஒரு பாசத்தோடு எப்படி சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்களோ அதைச் கேட்டு செய்வோம்.ஆனால் கருத்தியல் என்று வந்து விட்டால், தமிழ்நாடு என்று வந்துவிட்டால்,அத்தனை பேரும் ஓர் அணியில் நின்று தமிழ்நாட்டிற்காக போராடுவோம்.

### சந்தர்ப்ப வாதக் கூட்டணியை உருவாக்கியிருக்கிறார்கள்!

எதிரிலே இருக்கக்கூடியவர்கள் கொஞ்ச நாள்களுக்கு முன்பு என்ன சொன்னார்கள்?

எந்தக் காலத்திலேயும் பி.ஜே.பி.யுடன் அ.தி.மு.க. கூட்டணி வைக்காது என்று சத்தியம் என்று சொன்னார்கள் அதனால்தான் மக்கள் அவர்கள் எந்த வாக்குறுதி கொடுத்தாலும் வந்த உடனே தன்னுடைய வாக்குறுதி எல்லாவற்றையும் மறந்து விட்டு இன்று சந்தர்ப்பவாத கூட்டணியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.அதனால்தான் மக்கள் அவர்கள் எந்த வாக்குறுதி கொடுத்தாலும் அதை நம்ப தயாராக இல்லை. தேர்தல் அறிக்கை என்று எடுத்துக் கொண்டால் கூட எடப்பாடி அவர்கள் சொல்லுகிறார் என்னுடைய தேர்தல் அறிக்கையை பார்த்து பார்த்து தான் காப்பி அடித்தார்கள் என்கிறார்.

உண்மையைச் சொன்னால் அந்தத் தேர்தல் அறிக்கையை நான் படிக்க கூட இல்லை.நான்மட்டுமல்ல,ஊடகத்துறையைச் சார்ந்தவர்களும் படிக்கவில்லை மக்களும் படிக்கவில்லை,மக்களிடம் போய் கேட்டால் அதில் என்ன இருக்கிறது என தெரியாது.ஆனால் தி.மு.க. அறிக்கையில் என்னென்ன இருக்கிறது என்று என்று கேட்டால் யாரிடம் வேண்டு மானாலும் கேட்கலாம். தமிழ்நாட்டில் கேட்கலாம் அவர்கள் சொல்வார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தேர்தல் அறிக்கையில் என்ன சொல்லப்படுகிறதோ அது செய்து தரப்படும் என்பது மக்களுக்கு தெரியும்.

அந்த உறுதியை,அந்த நம்பிக்கையை, மக்கள் நம் மீது வைத்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் இந்த கூட்டணி என்பது வெறும் தமிழ்நாட்டிற்கான கூட்டணி அல்ல.இந்த நாட்டை காப்பாற்றக் கூடிய கூட்டணி, ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பி.ஜே.பி. மாநிலத்தின் உரிமைகளை பறிக்கும் போது அதற்காக எதிர்த்து நின்று அந்த நாடாளுமன்றத்தில் போராடக் கூடிய கூட்டணி நம்முடைய கூட்டணி. அதேபோல மத நல்லிணக்கத்துக்கு எதிராக சட்டத்தை

கொண்டு வரும்போது அதற்கு எதிராக போராடக் கூடிய கூட்டணி நம்முடைய கூட்டணி.மாநில உரிமைகளை,மக்கள் உரிமைகளை பறிக்கும்போது நம்முடைய மொழியை சிதைக்க நினைக்கும் போது

நமது உரிமைகளை பறிக்க நினைக்கும் போது அதற்காக ஒன்றாக நின்று வாதாடக்கூடிய கூட்டணி நம்முடைய கூட்டணி என்று மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தேர்தல் வெற்றி தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இந்தியாவை சுற்றியுள்ள மற்ற மாநிலங்களுக்கும் மாற்றத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை தரும் மாநில உரிமைகளை பறிக்கும் போதும், பா.ஜ.க. எதிர்க்கவும் மதநல்லிணக்கத்தை காக்கவும் இந்த வெற்றி அவசியம்.நான் முதல்வன் திட்டம்மற்றும் பெண்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் 1000 ம் என்பதை இரட்டிபாக 2000 ஆக உயர்த்தப்படும் என முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இது போன்ற திட்டங்கள் தொடர வேண்டும். எனவே பாளையங்கோட்டை தொகுதியில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் கழக வேட்பாளர் அப்துல் வகாப்பை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசினார்.

இந்நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் முருகன், முன்னாள் அமைச்சர் மைதீன்கான், மாமன்ற உறுப்பினர்கள் சகாய ஜூலியட் மேரி,கோகுல வாணிதீர்மானக்குழு உறுப்பினர் சுப சீதாராமன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பேச்சிபாண்டியன், லெட்சுமணன், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ், தர்மன், கிரிஜா, நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ், அணி அமைப்பாளர்கள் மகேஸ்வரி, அனிதா,செல்வம்,கூட்டணி கட்சி நிர்வாகிகள் காங்கிரஸ் கட்சி ராமேஸ்வரன், சங்கர பாண்டியன், சிபிஐ சடையப்பன்,சிபிஎம் ஸ்ரீராம்,தே.மு.தி.க. சுடலைமுத்து,வி.சி.க. தமிழ்ச்செல்வன், ம.தி.மு.க. நிஜாம்,திராவிட கழகம் வேல்முருகன், மக்கள் நீதி மையம் விஜயகுமார், முஸ்லீம் லீக் வீரை ஆதம் எலியாஸ்,மனிதநேய மக்கள் கட்சி ரசூல், மனித நேய ஜனதா கட்சி பாரூக், பிலால் எஸ்.டி.பி.ஐ. பீர்முகமது உள்பட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.